# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. 672 / 2025 |
| Prosecution of witness | : | P.W. - 1 |
| List of witness | : | L.W - 2 |
| Name | : | சாமிநாதன் |
| Father's /Husband Name | : | கலியபெருமாள் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 54 |
| Occupation | : | தலைமைக்காவலர் குடவாசல் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day December 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா குடவாசல் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.04.2022-ம் தேதி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்த போது 15.00 மணிக்கு நானும் தலைமைக்காவலர் 445 சரவணன் மற்றும் 651 ரவி என்பவர்களுடன் ஆய்வாளரின் உத்தரவின்பேரில் மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாக நன்னிலம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் சரகத்திற்குட்பட்ட நெடுஞ்சேரி பிரிவு ரோடு அருகே கண்காணித்து வந்தபோது சந்தேகம் படும்படியாக நின்றுகொண்டிருந்த ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரணை செய்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த அன்பு, த/பெ. திரிசங்கு சிவன்கோவில் தெரு முகந்தனூர் என்பவரை மறித்து சோதனை செய்த போது சுமார் 100 எம்.எல் பாண்டி சாராய பாட்டில்கள் 10 இருந்தது. மேலும், அவர் பாண்டி சாராயத்தை வைத்திருக்க அவரிடம் எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாததால் 15.00 மணிக்கு அவரை காரணம் கூறி கைது செய்து எங்கள் முன்னிலையில் 15.15 மணிக்கு அவரிடமிருந்த தடயங்களை கைப்பற்றி அந்த இடத்திலேயே கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். தனிநபர் சாட்சிகள் யாரும் சாட்சியாக வர முன்வராத காரணத்தினால் மேற்கண்ட கைப்பற்றுதல் மகஜரில் நானும், ரவி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது

நீதிமன்றத்தில் என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட தடய பொருளை 15.30 மணிக்கு சம்பவ இடத்திலேயே பிரிவு 32 TNP Act ன் கீழ் கொட்டி அழித்து மகஜர் தயார் செய்தார். அந்த அழிப்பு மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த அழிப்பு மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், 17.00 மணிக்கு எதிரியுடன் காவல் நிலையம் வந்து காவல் ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். மேற்படி வழக்கில் புலன் விசாரணைக்கு அவருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை இல்லை**.